සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව

சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

**Sabaragamuwa Provincial Department of Education**

පළමු වාර පරීක්ෂණය - 2016 | 10 ශ්‍රේණිය

முதலாம் தவணைப் பரீட்சை 2016 | தரம் 10

**First Term Test - 2016** | **Grade 10**

*ක්‍රිස්තු ධර්මය I*

***கிறிஸ்தவம் I***

***Christianity I***

*පැය 1*

ஒரு மணித்தியாலம்

***one hours***

## பகுதி I

**சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக**

1) "அவன் பிறப்பின் நிமித்தம் அநேகர் சந்தோசப்படுவார்கள்" எனக் கூறப்பட்டது

1. இயேசுகிறிஸ்து 2. திருமுழுக்கு யோவான் 3. சிம்சோன் 4. ஈசாக்கு

2) மெசியா என்பதன் பொருள்

1. பரிசுத்தமானவர் 2. சர்வவல்லமையுடையவர் 3. தேவன் நம்மோடு இருக்கிறார்

4. அருட்பொழிவு செய்யப்பட்டவர்

3) எப்பிராத்தா எனப்படுவது

1. அப்ப வீடு 2. பெத்லகேம் 3. கொல்கொதா 4. சமாரியா

4) திருச்சபையின் முதல் தலைவர்

1. பிலிப்பு 2. யோவான் 3. சீமான் பேதுரு 4. தோமா

5) "நான் எனது தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்கு தெரியாதா" என வினாவியவர்

1. ஏசா 2. பென்யமீன் 3. இயேசுகிறிஸ்து 4. ஈசாக்கு

6) சகரியா இறைசித்தத்திற்கு காண்பித்த பிரதி நடத்தை

1. அழுதார் 2. விசுவாசித்தார் 3. கீழ்படிந்தார் 4. விசுவாசிக்கவில்லை

7) இயேசு கிறிஸ்து பாவிகளுக்கு

1. வெறுக்கிறார் 2. நேசிக்கிறார் 3. மன்னிக்கிறார் 4. எல்லாம் பிழை

8) இயேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்கு பெற்றதன் மூலம் வெளிப்படும் குணப்பண்பு

1. அன்பு 2. விட்டுக்கொடுப்பு

3. தாழ்மை 4. இரக்கம்

9) இயேசு சோதனைகளை மேற்கொண்டது

1. இறைவார்த்தை மூலம்

2. பெலத்தின் மூலம்

3. பாடலின் மூலம்

4. எதிர்ப்பு காட்டியதன் மூலம்

10) இயேசுவின் பிறப்பின் இடத்தை குறித்து முன்னறிவித்த இறைவாக்கினர்

1. ஏசாயா 2. எரேமியா 3. எசேக்கியேல் 4. மீகா

The National e-learning Portal for The General Education

11) இயேசு தனது திருப்பணியை ஆரம்பித்த இடம்

1. எருசலேம் 2. நாசரேத்து 3. எரிகோ 4. சமாரியா

12) சிமியோன் என்பதன் பொருள்

1. விடுதலையாளர் 3. மீட்பர் 3. கடவுள் கேட்கின்றவர் 4. இறைவாக்கினர்

13) விருத்தசேதன வைபவத்தின் போது குழந்தைகளுக்கு கூறப்படும் வாழ்த்துச் செய்தி

1. சமாதானமாய் வாழ்
2. கடவுள் ஆசிர்வதிப்பாராக
3. சகலத்தையும் ஆண்டுகொள்
4. உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடு இருப்பார்

14) உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கொள்ளாத பிரிவினர்

1. சதுசேயர் 2. பரிசேயர்
3. மறைநூல் அறிஞர் 4. ஏரோதியர்

15) சமாதானம் ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள்

1. சமாதானம் பெறுவர்
2. இரக்கம் பெறுவர்
3. தேவனின் மைந்தன் எனப்படுவர்
4. துன்பப்படுபவர்

16) கிறிஸ்தவர்களின் சம்பிரதாயம் அல்லாதது

1. அர்ப்பணிப்பு 2. திருமுழுக்கு 3.திருவிருந்து 4.ஏடு தொடக்குதல்

17) நாசரேத்தூரில் இயேசு புகழ்ந்து பேசிய இரு பிற நபர்கள்

1. நாமான், சாரிபாத்விதவை 2. சகேயு, லேவி
3. எலிசபெத், சகரியா 3. எலியா, எலிசா

18) பேதுரு என்பதன் கருத்து

1. கடவுள் கேட்கின்றவர்
2. கற்பாறை
3. ரோமம் உள்ளவன்
4. விடுதலையானவர்

19) இயேசுவானவர் சீடர்களை பணிக்கு அனுப்பும் போது கொடுத்த அறிவுரை அல்லாதது

1. கைத்தடி, பை, உணவு எடுத்துச்செல்லாதிருங்கள்
2. எளிமையான வாழ்வு
3. இருவர் இருவராகச் செல்லல்
4. ஏற்றுக்கொள்ளாதவர்களின் வீட்டில் தங்குதல்

20) பின்வரும் சீடர்களுள் மீனவர் அல்லாதவர்

1. பேதுரு 2. யாக்கோபு 3. மத்தேயு 4.யோவான்

The National e-learning Portal for The General Education

21) இம்மானுவேல் என்பதன் பொருள்

1. தேவன் நம்மோடு இருக்கிறார்
2. வல்லமையுடையவர்
3. மீட்பர்
4. பிறஇனத்தவர்

22)இறைவார்த்தையை கேட்டு அதன்படி செய்பவர்களே என் தாயும் சகோதரருமாய் இருக்கின்றார்கள் இவ்வாறு இயேசு கூறியதிலிருந்து

1. தன் குடும்பத்தை வெறுத்தார்
2. தன்னை கடவுளாக உயர்த்தினார்
3. இரத்த உறவை கடந்து செல்லும் விரிவான குடும்ப உறவை அறிமுகப்படுத்தினார்
4. தன் தாயையும் சகோதரர்களையும் எதிர்த்தார்

23) மனம்மாறிய சகேயுவின் பிரதிநடத்தையாக அமைவது

1. இயேசுவை பின்தொடந்தார்
2. தன் தொழிலை கைவிட்டார்
3. இயேசுவிற்கு விருந்தளித்தார்
4. தன் சொத்துக்களை விற்று ஏழைகளுக்கு பகிர்ந்தளித்தார்

24) சிறுவர்களை துன்புறுத்துபவரை இவ்வாறு செய்தல் வேண்டுமென இயேசு குறிப்பிடுகிறார்

1. அவர்களை தண்டிக்க வேண்டும்
2. ஏந்திர கல்லை கழுத்தில் கட்டி கடலின் ஆழத்தில் போட வேண்டும்
3. சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்
4. இவர்களை அங்கிகரிக்க வேண்டும்

25) உயிர்தெழுதலில் நம்பிக்கை கொள்ளாத சீடன்

1. தோமா
2. சீமோன்
3. யூதா
4. மத்தேயு

26) இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் சீடனுக்கு இருக்க வேண்டிய பண்பு அல்லாதது

1. சேவை செய்தல்
2. தாழ்மை
3. தியாக மனப்பான்மை
4. தற்பெருமை

27) இயேசு கிறிஸ்து ஒய்வு நாளில் செய்த அற்புதம்

1. குருடனுக்கு பார்வை அளித்தல்
2. முடவனை நடக்கச் செய்தல்
3. கூனிப்பெண்ணை குணப்படுத்தல்
4. தொழுநோயாளனை குணப்படுத்தல்

28) கிறிஸ்தவ குடும்பமொன்றிற்கு இருக்க வேண்டிய பண்பு

1. சமுதாயத்திற்கு சான்று பகிர்தல்
2. பிறருடன் தொடர்பின்றி வாழுதல்
3. திருச்சபைகளுக்கு மட்டும் உதவுதல்
4. ஆபத்தைக் கண்டு விலகிச் செல்லல்

29) திருத்தூதர் என்பதன் பொருள்

1. அனுப்பப்பட்டவர்
2. பணியாளர்கள்
3. பயிற்றுவிக்கப்பட்டு அனுப்பப்பட்டவர்
4. மக்கள் தலைவன்

30) "அஞ்சாதே இன்று முதல் நீ மனிதர்களை பிடிப்பவன் ஆவாய்" இவ்வாறு இயேசு கூறியது

1. யோவானிற்கு  2. யூதாஸிற்கு  3. பேதுருவிற்கு  4. யோபுவிற்கு

31) " நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள் என தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்கு தெரியாதா? இவ்வாறு இயேசு கூறியதிலிருந்து வெளிப்படும் பண்பு அல்லாதது

1. கடவுளை இயேசு தனது பிதாவாக ஏற்றுக்கொண்டார்
2. தன் பெற்றோரின் பாசத்தை நிராகரித்தார்
3. தனது பணியை பற்றி சரிவர அறிந்திருந்தார்
4. கடவுளை வழிபட ஆலயத்தில் தரித்திருக்க வேண்டும்

32) திருமுழுக்கு யோவான் வரித்தண்டுவோருக்கு கூறிய அறிவுரை,

1. உணவை பகிர்ந்து கொள்ள வேண்டும்
2. உடையை பகிரவேணடும்
3. குறிப்பிட்ட தொகைக்கு மேலதிகமாக வரி அறவிடாதீர்கள்
4. எவர் மீதும் குற்றம் சுமத்தாதீர்கள்

33) இயேசுவை பின்பற்றியதும் தனது வீட்டில் அவருக்கு விருந்தினை ஆயத்தப்படுத்திய சீடன்

1. தோமா  2. யூதா  3. பிலிப்பு  4. சீமோன்

34) இன, மத, நிற வேறுபாடுகள் கொண்ட சமூகத்தில் வாழும் ஒரு கிறிஸ்தவன் எவ்விதம் செயற்பட வேண்டும் என இயேசு கிறிஸ்து எந்த உவமை மூலம் கற்பித்தார்

1. கடுகு விதை  2. நல்ல சமாரியன்
3. தாலந்து உவமை  4. கானாவூர் கல்யாணம்

35) கெனசரேத்து கடலருகே இயேசு பேதுருவிற்கு விடுத்த அறைகூறல்

1. வலையை ஆழத்தில் விரிக்கும் படி
2. யாவற்றையும் விட்டுவிடும்படி
3. மனிதர்களை பிடிப்பதில் ஈடுபடும்படி
4. மனந்திருந்தும்படி

36) நாசரேத்து தொழுகைகூடத்தில் இயேசு வழங்கிய செய்தியின் மூலம் வெளிப்படும் அவரின் பணியின் நோக்கம்

1. இறைவாக்குரைத்தலும் ஆவியை கொடுப்பதும்
2. சிறைபட்டோருக்கு விடுதலையும் ஏழைகளுக்கு நற்செய்தி அறிவித்தலும்
3. அற்புதங்கள் செய்தல்
4. இறைசெய்தி கூறல்

37) கிறிஸ்தவன் என்ற ரீதியில் நீர் சமுதாயத்திற்கு கொடுக்கும் முன்மாதிரி

1. சமுதாயத்திற்கு சான்று பகிர்ந்து சேவை செய்தல்
2. சமுதாயத்தை தீயவழிக்கு இட்டுச்செல்லல்
3. சமுதாயத்தோருக்கு ஆலோசனை வழங்கல்
4. சமுதாயத்தோரை சீர்ப்படுத்த முனைதல்

38) இன்று இலங்கையின் குடும்ப நிறுவனத்திற்கு மிகப்பெரிய பிரச்சனையாக அமைவது

1. பொருளாதாரக் கஸ்டம்
2. குடும்ப உறுப்பினர் நோய்வாய்ப்படல்
3. பெற்றோர் தமது பொறுப்பில் இருந்து விலகிச் செல்லல்
4. சமுதாயத்தோரை சீர்ப்படுத்த முனைதல்

39) ஆணாதிக்கமுள்ள சமூகத்திற்கு இயேசுவின் போதனை மூலம் கொடுக்கக் கூடிய செய்தி

1. ஆண்கள் அனைவரையும் மதிக்க வேண்டும்
2. ஆண்கள் தம்மை மட்டுமன்றி தம் மனைவிமார்களையும் மதிக்க வேண்டும்
3. பெண்களை சமுகத்தில் கட்டுப்படுத்தி வைக்கக் கூடாது
4. பெண்களுக்கு கட்டுப்பாடு விதிக்க வேண்டும்

40) எமது சூழலில் நாம் இயேசுவுக்குச் சாட்சி பகிரக்கூடிய ஒரு முக்கிய சந்தர்ப்பம்

1. அயலவரின் வீட்டில் நடைபெறும் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளல்
2. விபத்தில் சிக்கிய ஒருவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கு மட்டும் உதவுதல்
3. அயலவருக்கு கருத்துள்ள பிரசங்கத்தை மட்டும் செய்தல்
4. தமக்கு எதிராக செயற்படும் அயலவருடன் சிறந்த உறவை வளர்க்கக் கூடிய முறையில் முயற்சி செய்தல்

The National e-learning Portal for The General Education